சார்பு நீதிமன்றம், விருதுநகர்

O.S.No: 17/2023 Date: 21.01.2025

வாதி தரப்பு சாட்சி–1(Pw1) ன் வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144வது பிரிவின்படி திருமதி.K.சேர்மக்கனி, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருணகிரி | சாதி | : | -- |
| த/பெ | : | முருகன் | சமயம் | : | -- |
| கிராமம் | : | எரிச்சநத்தம் | தொழில் | : | |
| தாலுகா | : | சிவகாசி | வயது | : | 39 |

<u>முதல் விசாரணை–</u>

நான் இவ்வழக்கில் வாதியின் மகன் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை என் சாட்சியத்தின் ஒரு பகுதியாக வாசித்துக்கொள்ள வேண்டுகிறேன். 12.09.2001ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் SRO நகல் **வா.சா.ஆ.1.** 11.12.2006ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் SRO நகல் **வா.சா.ஆ.2.** 22.02.2006ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் SRO நகல் **வா.சா.ஆ.3.** 30.12.2015ம் தேதிய 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் SRO நகல் **வா.சா.ஆ.4**. 29.12.2021ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் SRO நகல் **வா.சா.ஆ.5.** 17.10.2022ம் தேதியிட்ட எனது தந்தை எம்.புதுப்பட்டி காவல்துறையினரிடம் கொடுத்த புகார் மனு மற்றும் பதிவுதபால் ரசீது **வா.சா.ஆ.6(வரிசை).** 17.10.2022ம் தேதியிட்ட எனது தந்தை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த புகார் மனு

ஜெராக்ஸ் மற்றும் ரசீது கணினி நகல் **வா.சா.ஆ.7(வரிசை).** பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.